தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 14, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2027

1996, பிப்ரவரி 26, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா **அவர்கள்** *தலைமையில், காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

கொடை, இன்சொல், செங்கோல், குடியோம்பல் ஆகிய நான்கையும் உடைய அரசு ஏனைய அரசுகளுக்கெல்லாம் ஒளி வழங்கும் விளக்குப் போன்று விளங்கும்.

(1) வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 121, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். வினா எண் 122, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

122--

பட்டா வழங்குதல்

*21012--**திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஜவ்வாது மலையில் வாழும் நிலமற்ற மக்கள் பரம்பரையாக அனுபவித்து வரும் நிலங்களுக்குப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1996 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் வாழும் நிலமற்ற மக்கள் பரம்பரை பரம்பரையாக சுமார் 50, 60, 100 ஆண்டுகள் என்ற வகையிலே அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனுபவித்து வருகின்ற அந்த இடத்திற்கு பட்டா வழங்கப்படவில்லை. தமிழகத்திலே, இதுபோன்ற ஏழை எளிய மக்களுக்காக அந்த கிளாசிபிகேசனை மாற்றி பட்டா வழங்கிக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் இதை மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-7-1991-ஆம் ஆண்டு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி அரசு ஆணை எண் 1168 (வருவாய்த்துறை) மூலம் தமிழகத்திலுள்ள அனைத்து மலைப் பிரதேச நிலங்களும் ஒப்படை செய்வதற்கு தடை செய்யப்பட்டன. மேலும் இது சம்பந்தமாக ஒரு உயர்மட்ட ஆய்வுக் குழு அமைக்கவும் மேற்படி அரசு ஆணையில் உத்தரவிடப்பட்டது. அந்த அரசு ஆணையின்படி சிறப்பு ஆணையாளர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர் (தலைமையிடம்), தலைமை வனப் பாதுகாவலர், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், இணை ஆணையர், நில நிர்வாகத்துறை, இயக்குநர் நில அளவை மற்றும் செட்டில்மென்ட் ஆகியோர் இடம் பெற்றனர். மேற்படி குழுவிற்கான வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து கீழ்க்காணும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(1) மலைப் பகுதியிலுள்ள இயற்கை வளம், இயற்கைச் சூழல், சமன்பாடு, மண் வளம், வனச் செல்வங்களை பாதுகாத்தல், பெருகி வரும் நிலச் சரிவு, நில சீரழிவை தடுக்கவும், மலைப் பகுதிகளிலுள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பாதுகாப்பு வனப் பகுதிகளிலுள்ள ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளை அகற்றி, மேலும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாது பாதுகாக்கவும், தேவையான வழிவகைகளை ஆய்வு செய்தல். தற்போதுள்ள ஆக்கிரமிப்புகளை, ஆட்சேபகரமாக உள்ளது, ஆட்சேபணை அற்றது என்று வகைப்படுத்தி வரையறை நிர்ணயம் செய்து பரிந்துரை செய்தல், அப்பகுதியில் ஆக்கிரமித்துள்ள

1996 பிப்ரவரி 26]

பழங்குடியினருக்கு சலுகைகள் வழங்க வேண்டிய தேவை குறித்தும்-- மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு--இப்பகுதியில் ஆக்கிரமித்துள்ள பழங்குடியினருக்கு சலுகைகள் வழங்க வேண்டியதன் தேவை குறித்தும், சலுகைகள் குறித்தும் அளவு வரம்பு நிர்ணயம் செய்தல். தனியார் எஸ்டேட்டுகள் அரசு நிலங்களை மிகுந்த அளவில் ஆக்கிரமித்துள்ளது குறித்து ஆய்வு செய்து உடனடியாக அவற்றை வெளியேற்றவும் வழிவகை செய்தல். மேலும் எதிர்காலத்தில் வசதி படைத்தவர்கள், எஸ்டேட்டுகள் ஆக்கிரமிப்புகளை ஏற்படுத்தாது தடுத்து பாதுகாக்க வகை செய்ய ஆய்வு செய்து அறிக்கை அளித்தல். மேற்படி அறிக்கை அரசுக்கு வந்துள்ளது. அரசுக்கு வந்த பிறகு அந்த அறிக்கையை மேலும் துல்லியமாக பார்ப்பதற்காக Hill Area Conservative Authority முன் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த அறிக்கை வருவாய்த் துறை செயலாளர், செயலாளர், சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை, தலைமை வனப் பாதுகாவலர், இயக்குநர் நகரம் மற்றும் ஊரமைப்பு, மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்டம் ஆகியோருடைய ஆய்வில் உள்ளது.

முற்பகல் 10–05

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய விரிவான, விளக்கமான அறிக்கைக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடவடிக்கைகளை விரைவுபடுத்தி விரைந்து அந்தப் பகுதி மக்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பதிலளித்தவாறு, அங்கே அந்த வனப்பகுதியில் இருக்கிற, ஜவ்வாது மலையில் இருக்கிற மூதாதையர்களுக்கு, அவர்கள் இருக்கிற இடம் மலைப் பகுதிகளின் வனப்புக் கெடாத வகையில் இருந்தால், அதனை அரசோ, வனத்துறையோ வரையறை செய்து எந்த அளவுக்கு, எவ்வளவு கொடுக்க முடியும் என்பதை ஆய்வு செய்து ஒரு நல்ல முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நமது அமைச்சரவர்கள் சுற்றுப்புற சுகாதார வனப் பாதுகாப்பு பற்றி விளக்கமாகப் பதில் அளித்ததற்கு நன்றி. நீண்ட நாட்களாக தாங்கள் அனுபவித்து வரும் நிலத்திற்கு அங்குள்ள மலைவாழ் மக்களுக்கு பட்டா வழ்ங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கீழ்ப்பகுதியிலே இருக்கிற பெரும் வசதி படைத்தவர்கள் அந்த மலைவாழ் மக்களிடத்திலே, குறிப்பாக ஜவ்வாது மலைப் பகுதியிலே ஜம்னாமருத்தூர், ஏலகிரி மலைப்பகுதி போன்ற இடங்களிலே உள்ள பெரிய நிலச்சுவான்தார்கள், பெரும் வசதி படைத்தவர்கள் நிலத்தை விலைக்கு வாங்கி, பண்ணை வீடாக அமைத்து வாழ்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு ஒரு வாரம் போய்த் தங்குவதற்கு, அவ்வளவு பெரிய இடத்தை வைத்துக் கொண்டு சுற்றுப்புற சுகாதாரத்தைக் கெடுக்கும் வகையில் அவர்கள் வாழ்கிறார்கள். ஆகவே, அந்த மலைவாழ் மக்களுடைய நிலத்தைப் பாதுகாக்க அவர்களிடமிருந்து அந்த நிலத்தை வாங்கக் கூடாது என்று சட்டரீதியாக ஒரு கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பலமுறை இந்த அவையிலே தெரிவித்தபடி, இந்தியத் துணைக் கண்டத்திலே காஷ்மீரைத் தவிர எந்த இடத்தையும் யார் வேண்டுமானாலும் வாங்கலாம். அதைச் சட்ட ரீதியாக அரசு தடுக்க முடியாது. ஆகவே, சட்ட ரீதியாக அந்த மலைப் பகுதிகளிலே, ஜவ்வாது மலை போன்ற பகுதிகளிலே நிலத்தை வாங்கக்கூடாது என்று தடுக்கமுடியாவிட்டாலும், அங்கே வாங்கப்படுகின்ற நிலம், அங்கே இருக்கின்ற நிலைமைக்கேற்றவாறு அந்த வனப் பகுதிகளிலுள்ள இயற்கை வளம், இயற்கை எழில் ஆகியவை கெடாத வகையில் பார்த்துக் கொள்வதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்காகப் பல நல்ல காரியங்களைச் செய்து வரும் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு, இந்த ஜவ்வாது மலைவாழ் மக்களுக்கு, ஐந்து ஆண்டு காலத்திற்குள் எவ்வளவு பட்டாக்கள் வழங்கியுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

1996 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு பட்டாக்கள் கொடுக்கப்பட்டன என்கின்ற விவரம் என்னிடத்திலே தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீரபாண்டியன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலையில் புலியூர், விளாங்குச்சி கூட்டாத்தூர், பலாமருதூர் ஆகிய கிராமங்களில் கிட்டத்தட்ட இரண்டு, மூன்று தலைமுறையாக ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு பயிரிட்டுக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். வனத்துறை அங்கே மரங்களை நடுவதற்கு உடனடியாக ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. நான் அமைச்சரிடத்திலே ஏற்கெனவே சொல்லி மரம் நடுவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே தெரிவித்தபடி அங்கே இருக்கிற, ஜவ்வாது மலைப்பகுதிவாழ் மலைவாழ் மக்களுக்குக் குடியிருப்புகள் அளிக்க அரசு கனிவோடு ஆராய்ந்து வேண்டிய உத்தரவுகளை விரைவில் பிறப்பிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *123*, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

123--

சார் பதிவாளர் அலுவலகம் திறத்தல்

**40277*--திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோயம்புத்தூர் துடியலூரில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,